# எருசலேமை நோக்கி இயேசுவின் வெற்றிப் பயணம்

**பவனி பற்றிய அதிகாரங்கள்:**

**மத்தேயு 21 : 1-16**
**மாற்கு 11 : 1-10**
**லூக்கா 19 : 29-48**
**யோவான் 12 : 12-19**

**♦ஓசன்னா என்ற வார்த்தையின் பொருள்:**



கர்த்தாவே இரட்சியும்.
சங்கீதம் 118 : 25

**♦பவனியின் போது ஜனங்கள் வாழ்த்திய வார்த்தைகள்:**

சாந்தகுணமுள்ள ராஜாவே!
கழுதையின் மேலும் கழுதைக் குட்டியாகிய மறியின்மேலும் ஏறி வந்த இயேசு கிறிஸ்துவே உம்மைத் துதிக்கிறோம்!
தாவீதின் குமாரனே
உம்மைப் போற்றுகிறோம்!
கர்த்தரின் நாமத்தினாலே வருகிற இயேசு கிறிஸ்துவே
உம்மை ஸ்தோத்திரிக்கிறோம்!
உன்னதத்திலே ஓசன்னா
நாசரேத்திலிருந்து வந்த தீர்க்கதரிசியாகிய இயேசுவே
உம்மைத் துதிக்கிறோம்!

**மத்தேயு 21** : 4,9,11

கர்த்தரின் நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர்.
உன்னதத்திலே ஓசன்னா

**மாற்கு 11** : 9, 10

கர்த்தரின் நாமத்தினாலே வருகிற ராஜா ஸ்தோத்திரிக்கப்பட்டவர், பரலோகத்திலே சமாதானமும் உன்னதத்திலே மகிமையும் உண்டாவதாக. **லூக்கா 19** : 38

ஓசன்னா, கர்த்தரின் நாமத்தினாலே வருகிற இஸ்ரவேலின் ராஜா ஸ்தோத்திரிக்கப்பட்டவர்.

**யோவான் 12** : 13

**♦குருத்தோலை நாளில் இயேசுவை எதிர்த்த மக்களின் உணர்ச்சிகள்**

மத்தேயு 21 - பிரதான ஆசாரியர் வேதபாரகர் **கோபம்**
மாற்கு 11 - பிரதான ஆசாரியர் வேதபாரகர் **பயம்**

**♦குருத்தோலை நாளில் இருந்த மனிதர்கள்:**

மத்தேயு 21

1. சீஷர்கள் - அவர் கட்டளையை நிறைவேற்றினர்
2. திரளான ஜனங்கள் - அவருக்குப் பின் சென்றனர்
3. நகரத்தார் - அன்றைக்குத்தான் அவரை புதிதாய் அறிந்து கொண்டவர்கள்
4. பிள்ளைகள் - அவரைத் துதித்தார்கள்
5. குருடர், சப்பாணிகள் - அவரைத் தேடி வந்தார்கள்
6. பிரதான ஆசாரியர், வேதபாரகர்- அவரை எதிர்த்தவர்கள்
7. மக்கள் - அவருடைய உபதேசத்தை குறித்து ஆச்சரியப்பட்டார்கள்

மாற்கு 11 : 18

**பவனி பற்றிய பழைய ஏற்பாடு தீர்க்கதரிசனம் (500 ஆண்டுகளுக்கு முன்)**

சீயோன் குமாரத்தியே, மிகவும் களிகூரு; எருசலேம் குமாரத்தியே, கெம்பீரி; இதோ, உன் ராஜா உன்னிடத்தில் வருகிறார்; அவர் நீதியுள்ளவரும் இரட்சிக்கிறவரும் தாழ்மையுள்ளவரும், கழுதையின் மேலும் கழுதைக் குட்டியாகிய மறியின் மேலும் ஏறிவருகிறவருமாயிருக்கிறார்.

*சகரியா 9 : 9*

♦ **குருத்தோலை நாளில் இயேசு கிறிஸ்துவின் உணர்ச்சிகள்**

**மத்தேயு 21**- துதியின் முக்கியத்துவத்தை உணர்த்தினார்

**மாற்கு 11**- ஆலயத்தைக் குறித்த பக்திவைராக்கியம்

**லூக்கா 19** - ஆத்தும பாரம்

**யோவான் 12** - இயேசு கிறிஸ்துவின் அர்ப்பணிப்பு

**கதா பாத்திரங்கள்:**

சீஷர்கள்
கழுதையின் சொந்தக்காரர்
மக்கள்
பிள்ளைகள்

**செய்தி**

♦ **மகிமைப்படுத்தப்பட்ட ராஜா**

நீங்கள் எப்படி இயேசுவை மகிமைப்படுத்துகிறீர்கள்?

சங்கீதம் 24

♦ **மீட்கும் ராஜா**

மேசியா - ராஜா வந்து மீட்டுக் கொள்வார் என்ற எதிர்பார்ப்பு
அரசியல் விதத்தில் அல்ல
ஆவிக்குரிய நிலையில்
மீட்பதற்காக தன்னுடைய உயிரையே சிலுவையில் தியாகம் செய்தார்.

♦ **மனதுருக்கத்தின் ராஜா**

சாந்த குணமுள்ளவராய் வந்த சாலேமின் ராஜா
இயேசு எருசலேமைப் பார்த்துக் கண்ணீர் சந்தினார்.
திருச்சபையை / உங்களை பார்த்து இயேசு மகிழ்ச்சியடைவாரா?
கண்ணீர் சிந்துவாரா?
ஏன் கண்ணீர் சிந்தினார்?
ஏக்கத்தையும் எச்சரிப்பையும் புறக்கணித்த எருசலேம்
உங்கள் நிலை என்ன?

♦ **மாசுகளை அகற்றும் ராஜா**

ஆலய சுத்திகரிப்பு யோவான் 2, 12
ஜெபவீடு கள்ளர் குகையாய் மாறி விட்டது.
பிதாவின் வீட்டில்/ பரிசுத்தக்குலைச்சல்
உங்கள் உள்ளத்தின் / திருச்சபையின் நிலை என்ன?



♦ **இயேசு ஏறிய கழுதை**

- இருவழி சந்திப்பில் இருந்தது
- கட்டப்பட்டிருந்தது
- கட்டவிழ்க்கப்பட்டது
- கொண்டு வரப்பட்டது
- இயேசு ஏறிச்சென்றது
- சாட்சியாக மாறியது

**சம்பவங்களின் தொடர்ச்சி**

1. எரிகோவில் குருடர் பார்வையடைதல்
2. சகேயுவை சந்தித்தல்.
3. பெத்பகேயுவில் பவனி ஆரம்பித்தல்.
4. எருசலேம் தேவாலயத்தை சுத்திகரித்தல்.
5. பெத்தானியாவுக்கு செல்லுதல்.
6. மீண்டும் எருசலேம் செல்லுதல்
7. தேவாலயத்தில் உரையாடல், உபதேசித்தல்

**குறிப்புகள்:**

பெத்பகே - இளம் அத்தியின் வீடு
பெத்தானியா - ஏழ்மையின் வீடு
எருசலேம் - சமாதானத்தின் நகரம்

**எரிகோவுக்கும்** பெத்பகேவுக்கும் உள்ள தூரம் சுமார் 22 கி.மீ. எருசலேமுக்கும் பெத்பகேவுக்கும் உள்ள தூரம் சுமார் 5.5 கி.மீ. எருசலேமுக்கும் பெத்தானியாவுக்கும் உள்ள தூரம் சுமார் 3.2 கி.மீ.

இந்த சம்பவம் பஸ்கா பண்டிகை காலத்தில் நடைபெற்றது. அந்த சமயத்தில் பல நாடுகளிலிருந்து வந்த யூத மக்கள் (இஸ்ரவேலர்)சுமார் 25 லட்சம் பேர் எருசலேமில் இருந்தார்கள். ஆண்டவராகிய இயேசுவை அரசியல் விடுதலை கொடுக்கப் போகும் மேசியாவாக மக்கள் எதிர் பார்த்தனர். உலக இரட்சகராக மரிக்கப் போகிறார் என்பதை அறியாதிருந்தார்கள்.

**Ph. 89030 11350 selwynde@gmail.com**